பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி-சென்னை-4

25 11 2025 7 15

செவ்வாய்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. பிரதமர் திரு. நரேந்திர மோடி ஹரியானாவில் சீக்கிய குரு தேக் பகதூரின் தியாக தின நிகழ்ச்சியில் இன்று மாலை பங்கேற்கிறார்.
2. பழங்குடியின மக்களின் நலனுக்கான நிதி ஒதுக்கீடு கடந்த 11 ஆண்டுகளில் 3 மடங்கு அதிகரிக்கப்பட்டுள்ளதற்கு குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் பாராட்டு தெரிவித்துள்ளார்.
3. சத்தீஸ்கட் மாநிலம் சுக்மா மாவட்டத்தில் 15 நக்சலைட்கள் காவல்துறையினரிடம் சரணடைந்தனர்.
4. கேலோ இந்தியா பல்கலைக்கழக விளையாட்டுப் போட்டிகள் ராஜஸ்தானில் தொடங்கியது.
5. உலக இளையோர் டேபிள் டென்னிஸ் போட்டியின் ஆடவர் 19 வயதுக்குட்பட்டோருக்கான பிரிவில் இந்தியா இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

பிரதமர் திரு. நரேந்திர மோடி ஹரியானாவின் குருக்ஷேத்ராவிற்கு இன்று பயணம் மேற்கொள்கிறார்.

அங்கு அவர் மாலை 4 மணியளவில் மகாபாரத அனுபவ மையத்தை பார்வையிடுகிறார்.

பின்னர் சீக்கியர்களின் 9வது குரு ஸ்ரீ குரு தேக் பகதூரின் தியாக தினத்தையொட்டி நடைபெறம் சிறப்பு நிகழ்ச்சியில் பிரதமர் பங்கேற்கிறார்.

அப்போது குருவின் 350வது தியாக தினத்தை குறிக்கும் வகையில் சிறப்பு நாணயத்தையும் அஞ்சல்தலையையும் வெளியிட்டு உரையாற்ற உள்ளார்.

அதைத் தொடர்ந்து ஸ்ரீமத் பகவத் கீதையின் தெய்வீக வெளிப்பாட்டுடன் தொடர்புடையதாக்கக் கருதப்படும் பிரம்ம நதியில் பிரதமர் தரிசனம் செய்து பூஜையில் ஈடுபட உள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

பழங்குடியின மக்களின் நலனுக்கான நிதி ஒதுக்கீடு கடந்த 11 ஆண்டுகளில் 3 மடங்கு அதிகரிக்கப்பட்டுள்ளதற்கு குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் பாராட்டு தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் பழங்குடியின நலத்துறை அமைச்சர் திரு. ஜுவல் ஓரம் மற்றும் உயரதிகாரிகள், பழங்குடியின சமூகங்களுக்கான திட்டங்கள் குறித்து எடுத்துரைத்தபோது அவர் இதனைத் தெரிவித்தார்.

உயர் கல்வியில் பழங்குடியின மாணவர்களின் சேர்க்கையை ஊக்குவிக்க சிறந்த பல்கலைக்கழகங்கள், பள்ளிகள் இடையே இணைப்பை ஏற்படுத்த வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார்.

பழங்குடியின மாணவர்கள் வெளிநாடுகளில் சென்று உயர்கல்வி பயில்வதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்த வேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டார்.

பழங்குடியின உரிமைகளை பாதுகாப்பது, கல்வி மற்றும் சுகாதார வசதிகளை மேம்படுத்துவது பழங்குடி மாணவர்களுக்கான கல்வி உதவித் தொகைகள் மற்றும் கலாச்சாரத்திற்கு புத்துயிரூட்டும் திட்டங்கள் குறித்து அதிகாரிகள் குடியரசு துணைத்தலைவரிடம் எடுத்துரைத்தனர்.

<<<<>>>>

சத்தீஸ்கட் மாநிலம் சுக்மா மாவட்டத்தில் 15 நக்சலைட்கள் காவல்துறையினரிடம் சரணடைந்தனர்.

இதுகுறித்து செய்தியாளர்களிடம் பேசிய சுக்மா மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் திரு. கிரண் சவான், சரணடையும் நக்சலைட்டுகளுக்கு தலா 50 ஆயிரம் ரூபாய் நிதியுதவி வழங்கப்படும் என்று கூறினார்.

மற்ற நக்சலைட்டுகளும் வன்முறையைக் கைவிட்டு சரணடையுமாறு அவர் கேட்டுக்கொண்டார்.

நடப்பாண்டில் இதுவரை மொத்தம் 650க்கும் மேற்பட்ட நக்சலைட்கள் சரணடைந்துள்ளனர்.

<<<<>>>>

இனி சர்வதேச திரைப்பட விழா குறித்த செய்திகள்...

இந்திய சர்வதேச திரைப்பட விழாவில் வேவ்ஸ் பிலிம் பஸார் நிகழ்வு நேற்றுடன் நிறைவடைந்தது.

பல்வேறு நாடுகளைச் சேர்ந்த திரைப்படத் தயாரிப்பாளர்கள், வளர்ந்து வரும் திறமையாளர்கள் ஆகியோர் இதில் கலந்துகொண்டனர்.

இந்நிகழ்ச்சியில் பேசிய திரைப்படத்துறை இணை செயலாளர் திரு. அஜய் நாகபூஷன், அடுத்த ஆண்டு வேவ்ஸ் பிலிம் பஸார் விரிவாக நடத்தப்படும் என்று தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் இணை தயாரிப்பு, திரைக்கதை மற்றும் செயற்கை நுண்ணறிவு திரைப்படப் பிரிவுகளில் விருதுகள் வழங்கப்பட்டன.

திரைப்பட விழாவின் சிறப்பு தருணங்கள் குறித்த காட்சிகள் திரையிடப்பட்டன.

புதிய கதை சொல்லாடல் மற்றும் வலுவான உலகளாவிய திரைப்பட கட்டமைப்பை கொண்டாடுதலுடன் வேவ்ஸ் பிலிம் பஸார் நிறைவடைந்தது.

<<<<>>>>

கேலோ இந்தியா பல்கலைக்கழக விளையாட்டுப் போட்டி ஜெய்ப்பூரில் தொடங்கியது.

ராஜஸ்தான் முதலமைச்சர் திரு. பஜன்லா சர்மா இப்போட்டியைத் தொடங்கி வைத்தார்.

இந்த நிகழ்ச்சியில் கலந்துகொண்டு பேசிய மத்திய விளையாட்டுத்துறை அமைச்சர் டாக்டர் மன்சுக் மாண்டவியா, இப்போட்டியில் பங்கேற்கும் வீரர்கள், நாட்டின் 140 கோடி மக்களின் நம்பிக்கையாக திகழ்கின்றனர் என்று கூறினார்.

போட்டியில் பங்கேற்கும் வீரர்களுக்கு அவர் வாழ்த்து தெரிவித்தார்.

222 பல்கலைக்கழங்கள் சார்பில் நான்காயித்து 400க்கும் மேற்பட்ட வீரர்கள் இப்போட்டியில் பங்கேற்கின்றனர்.

ராஜ்ஸ்தானின் 7 நகரங்களில் அடுத்த மாதம் 5ஆம் தேதி வரை இப்போட்டி நடைபெற உள்ளது.

மொத்தம் 23 பிரிவுகளில் கேலோ இந்தியா பல்கலைக்கழக விளையாட்டுப் போட்டி நடைபெறுகிறது.

<<<<>>>>

உலக மகளிர் கபடிக் கோப்பையை வென்ற இந்திய அணிக்கு பிரதமர் திரு. நரேந்திர மோடி வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ள அவர், இந்திய அணி சிறப்பான மன உறுதியையும், திறமையையும், அர்ப்பணிப்பையும் வெளிப்படுத்தியுள்ளதாக கூறியுள்ளார்.

இந்த வெற்றியின் மூலம் நாடு பெருமைப்படுவதாகவும், கபடிப் போட்டியில் எண்ணற்ற இளைஞர்களுக்கு இது உத்வேகம் அளிக்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

உலக மகளிர் கபடிக் கோப்பையை வென்ற இந்திய அணிக்கு மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ள அவர், இது பெருமை மிக்க தருணம் என்றும், மகளிர் கபடி அணி வராறு படைத்துள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

அவர்களுடைய எதிர்கால வெற்றிக்கும் திரு. அமித் ஷா வாழ்த்து தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

சென்னை ஐ.ஐ.டி. வளாகத்தை வரும் ஜனவரி மாதம் 2ஆம் தேதி முதல் 4ஆம் தேதி வரை பொதுமக்கள், மாணவர்கள் உள்ளிட்டோர் பார்வையிடலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆராய்ச்சி ஆய்வகங்கள், புதுமைக் கண்டுபிடிப்பு மையங்கள் ஆகியவற்றைக் காணலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதில் பங்கேற்க விரும்புவோர் அடுத்த மாதம் 5ஆம் தேதிக்குள் shaastra.org/open-house என்ற இணையதளத்தில் பதிவு செய்ய வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

<<<<>>>>

ரிசர்வ் வங்கி 5 ஆயிரம் ரூபாய் நோட்டுகளை வெளியிடப்போவதாக கூறப்படும் தகவல் தவறானது என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது.

இதுபோன்ற முடிவை ரிசர்வ் வங்கி எடுக்கவில்லை என்றும், நம்பகமான தகவல்களுக்கு ரிசர்வ் வங்கியின் இணையதளத்தை காணுமாறும் கூறியுள்ளது.

<<<<>>>>

நாட்டின் வடமேற்குப் பகுதியின் குறிப்பிட்ட இடங்களில் குறைந்தபட்ச வெப்பநிலை 2 முதல் 3 டிகிரி செல்சியஸ் வரை குறையக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

அந்தமான் நிகோபார், கேரளா, மாஹே, தமிழ்நாடு, புதுச்சேரி ஆகிய மாநிலங்கள் மற்றும் யூனியன்பிரதேசங்களின் சில பகுதிகளில் இன்று கனமழை பெய்யக்கூடும் என்று கூறியுள்ளது.

உத்தரப்பிரதேசத்தின் மேற்குப் பகுதி, அசாம், மேகாலயா, நாகாலாந்து, மணிப்பூர், மிசோரம், திரிபுரா மாநிலங்களில் இரவு மற்றும் அதிகாலை நேரங்களில் கடும் பனி நிலவக்கூடும் என்று தெரிவித்துள்ளது.

இதற்கிடையே தலைநகர் தில்லியில் காற்றின் தரக் குறியீடு மிகவும் மோசமடைந்துள்ளது.

நேற்றிரவு 8 மணியளவில் காற்றின் தரக் குறியீடு 377 புள்ளிகளாக பதிவானது என்று மத்திய மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

இந்தியா - ஆஃப்கனிஸ்தான் இடையே ஜவுளித்துறையில் ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்துவது குறித்து புதுதில்லியில் ஆலோசிக்கப்பட்டது.

புதுதில்லியில் இந்த ஆலோசனையில் ஜவுளித்துறையின் வர்த்தக ஆலோசகர் திரு. பிபின் மேனன் பங்கேற்றார்.

ஆஃப்கனிஸ்தான் தரப்பில் அந்நாட்டு பொருளாதார உறவுகளுக்கான தலைமை இயக்குநர் திரு. ஷஃபியுல்லா ஆஸம் தலைமையிலான உயர்நிலைக் குழு பங்கேற்றது.

<<<<>>>>

உலக இளையோர் டேபிள் டென்னிஸ் போட்டியின் ஆடவர் 19 வயதுக்குட்பட்டோருக்கான பிரிவில் இந்தியா இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளது.

ருமேனியாவில் நடைபெற்று வரும் இப்போட்டியின் அரையிறுதி ஆட்டத்தில் இந்தியா சீன தைபேயை வென்றது.

இறுதியாட்டத்தில் இந்தியா-ஜப்பானை எதிர்கொள்கிறது.

<<<<>>>>

Deaflympics போட்டியில் இந்தியாவின் Pranjali Prashanth Dhumal தங்கப் பதக்கம் வென்றார்.

ஜப்பானின் டோக்கியோவில் நடைபெற்று வரும் இப்போட்டியின் மகளிர் துப்பாக்கி சுடுதல் 25 மீட்டர் பிஸ்டல் பிரிவில் அவர் இப்பதக்கத்தைக் கைப்பற்றினார்.

இப்போட்டியில் இந்திய துப்பாக்கி சுடும் வீரர்கள் இதுவரை 7 தங்கம், 6 வெள்ளி, 3 வெண்கலப் பதக்கங்களை வென்றுள்ளனர்.

<<<<>>>>

அஸ்லான் ஷா கோப்பைக்கான ஹாக்கிப் போட்டியில் இந்தியா - பெல்ஜியம் அணிகளுக்கு இடையேயான ஆட்டம் இன்று நடைபெறுகிறது.

மலேசியாவில் நேற்று நடைபெறுவதாக இருந்த இந்த ஆட்டம் மழை காரணமாக இன்று ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

சையத் மோடி சர்வதேச பேட்மிண்டன் போட்டி லக்னோவில் இன்று தொடங்குகிறது.

இந்தியாவின் சார்பில் ஆயுஷ் ஷெட்டி, கிரண் ஜார்ஜ், தன்யா ஹேமந்த், Unnati Hooda உள்ளிட்ட முன்னணி வீரர்கள் பங்கேற்கின்றனர்.

வரும் 30ஆம் தேதி வரை இப்போட்டி நடைபெறுகிறது.

<<<<The End>>>>